**V. NARAYANASAMY**
CHIEF MINISTER
GOVERNMENT OF PUDUCHERRY

Off. : 0413-2333399, 2335530
2335328
Fax : 0413-2333135
Res. : 5, Ellaiamman Koil Street
Puducherry-605 001
0413-2339099
e-mail : cm.pon@nic.in

Date : **02.09.2020**

## ஆசிரியர் தின வாழ்த்துச் செய்தி

ஆசிரியப்பணி என்பது வெறும் கல்வியைக் கற்பிப்பதல்ல. நற்பண்பையும், நல்லொழுக்கத்தையும், நல் ஆற்றலையும் கற்பிக்க வல்லது. கல்லாதார் நாட்டில் இல்லாதவாறு கற்பித்தல் பணிசெய்யும் ஆசிரியர்களுக்குத் திருநாளாக செப்டம்பர் 5-ம் நாளை ஆசிரியர் தினமாக 1962 முதல் ஒவ்வொரு வருடமும் கொண்டாடி வருகின்றோம். சர்வபள்ளி டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்கள் எண்ணற்ற கலைகளைக் கற்று, மண்ணில் நல்லவண்ணம் வாழும் வகைகளை எடுத்துச் சொல்லும் ஆசிரியப்பணியினை திறம்பட ஆற்றி, நம் நாட்டின் குடியரசுத் தலைவராக உயர்ந்தவர். அவர் பிறந்த நாளே ஆசிரியர் தினமாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

குழந்தைகளின் நெஞ்சக் குடிலின் உள்ளே இருக்கும் கல்லாமை இருளைப் போக்கிட அறிவு தீபத்தினை ஏற்றும் ஆசிரியர்களே சமுதாயத்தின் கலங்கரை விளக்கமாக விளங்கி, சமுதாயத்தின் மேன்மைக்கும், மகிழ்ச்சிக்கும், உயர்வுக்கும் வழிகாட்டிகளாக இருப்பர்.

கொரோனா தொற்றுநோய் பரவி, அதனால் மாணவ, மாணவியர்களின் கல்வி பாதிக்கப்படும் இந்த நேரத்தில் ஆசிரியபெருமக்கள் தங்கள் பள்ளிகளிலிருந்து காணொலி காட்சி மூலமாகப் பிள்ளைகளுக்கு பாடத்தைத் தொடர்ந்து நடத்துதல் மாணவர்களுக்கு நாம் செய்யவேண்டிய கடமையாகும். கொரோனா தொற்றுநோய் காலத்தில் புதுச்சேரி மாநில மக்கள் கொரோனா தொற்றின் கோரத் தாண்டவத்திலிருந்து வெளிவர மற்ற துறை பணியாளர்களோடு இணைந்து உழைக்கும் ஆசிரியப்பெருமக்களுக்கு என் வாழ்த்துக்கள்.

2019-20 ஆண்டு பள்ளிகளில் நடைபெற்ற 10 மற்றும் 12-ஆம் வகுப்பு பொதுத்தேர்வுகளில் புதுச்சேரி மாநில மாணவர்கள் 95 விழுக்காட்டிற்கும் மேல் தேர்ச்சிபெற பாடுபட்ட ஆசிரிய பெருமக்களுக்கு என் வாழ்த்துக்கள். உங்களைத்

வே.நாராயணசாமி

...2/-

தொடர்ந்து ஊக்குவித்து, புதுச்சேரி மாநிலம் கல்வியில் சிறந்த மாநிலமாக வரவேண்டும் என்பதற்காக, உங்களோடு இணைந்து பாடுபடும் மாண்புமிகு அமைச்சர் திரு.இரா.கமலக்கண்ணன் அவர்களுக்கும், கல்வித்துறையைச் சேர்ந்த அனைவருக்கும் இந்த ஆசிரியர் தின நாளில் என் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வருங்கால இந்தியாவினை வல்லரசு நாடாக மாற்றும் வல்லமை படைத்த மாணவர்களை உருவாக்கி, தொட்டனைத்தூறும் மணற்கேணிபோல மாந்தர்க்கு கற்றனைத்தூறும் அறிவை வழங்கும் ஆசிரியர்களை நல்ல உடல் நலமும், எல்லா வளமும் பெற்று பெருவாழ்வு வாழ்க! வாழ்க! என்று வாழ்த்துகிறேன்.

(வே. நாராயணசாமி)